*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **08 பிப்ரவரி, 2025**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி ரோட்டரி பீச் டவுன் சங்கம் சார்பில் மேட்டுப்பாளையம் போக்குவரத்து முனையத்தில் உருவாக்கப்பட்டுள்ள மிகவாக்கி இயற்கை சுற்றுலா பூங்காவை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் இன்று (08-02-2025) பார்வையிட்டார். பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் தாயின் பெயரில் ஒரு மரம் திட்டத்தின் கீழ் இயற்கை சுற்றுலா பூங்காவில் துணைநிலை ஆளுநர் மரக்கன்று நட்டு வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, மியாவாக்கி பூங்காவை உருவாக்கி பராமரித்து வருபவர்களை துணைநிலை ஆளுநர் சிறப்பித்தார். அங்கு அமைக்கப்பட்டிருந்த மழை நீர் சேகரிப்பு அமைப்பு மியாவாக்கி பூங்கா ஆகியவற்றை பார்வையிட்டார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அங்கு சுவரில் வரைபட்டிருந்த ஓவியத்தின்கீழ் கையொப்பம் இட்டார்.

மேலும், இந்த பூங்கா நல்ல முறையில் பராமரிக்கவும், புதுச்சேரியின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் இது போன்ற குறுங்காடுகள் பலவற்றை உருவாக்கவும் கவனம் செலுத்த வேண்டும் என்று ரோட்டரி சங்கத்தினரைக் கேட்டுக் கொண்டார். சங்கத்தின் முயற்சியைப் பாராட்டினார்.

சங்கத்தின் தலைவர் திரு வினோத் ஷர்மா, செயலர் பிரகாஷ், திட்டத தலைவர் திரு புருஷோத்தமன் ஆகியோர் உடனிருந்தனர்.